சக மனிதனின் மனதை
காயப்படுத்திவிட்டு
இறைவனிடம் வேண்டும்
எந்த பிரார்த்தனையும்
பலிக்காது...!!!

# வணக்கம்

# பழமொழி நானூறு

# நூலின் பெயர்க் காரணம்

இந்நூலின் ஒவ்வொரு பாவின் இறுதியிலும் ஒவ்வொரு பழமொழியை உரைப்பதால் இந்நூலைப் “பழமொழி” என்றனர். இவ்வாறு அமைந்த நானூறு வெண்பாக்களைக் கொண்டது இந்நூல்.

# நூல் கூறும் கருத்துக்கள்

- பண்டைத் தமிழகத்தில் வழங்கிய இலக்கிய நாடோடிப் பழமொழிகள்.
- சங்ககால இரவலர், புரவலர் வரலாறுகள்.
- சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பற்றிய செய்திகள்.

# நூல் பற்றிய குறிப்பு

- ✓ பழமொழிகளையே நூல் முழுவதும் அமைத்து எழுதப்பட்ட நூல்களுள் மிகவும் தொன்மை வாய்ந்தது.
- ✓ முன்றுறை என்னும் ஊரில் வாழ்ந்த, குறுநில மன்னரான முன்றுறையரையர் என்பவர், இந்நூலின் ஆசிரியராவர்.
- ✓ முன்றுறையரையர் சமணராவர்.
- ✓ இந்நூலைப் பல பாகுபாடுகள் செய்து, காலஞ்சென்ற செல்வக் கேசவராய முதலியார் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

பாடல்:

அறஞ்செய் பவர்க்கும், அறவுழி நோக்கித்
திறந்தெரிந்து செய்தக்கால், செல்வழி நன்றாம்,
புறஞ்செய்யச், செல்வம் பெருகம்: அறஞ்செய்ய
அல்லவை நீங்கி விடும்.

பொருள்:

அறஞ்செய்பவரும், தகுதி உடையவர்க்கே அதனைச் செய்வதனால் அறத்தின் பயனை உண்மையாக அடைவார்கள். அறம் செய்ய அல்லவை நீங்கி விடும் என்பது பழமொழி. அறம் செய்யப் பாவம் நீங்கும் என்பதே இதன் பொருள்.

பாடல்:

முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும்,
தொல்லை, அளித்தாரைக் கேட்டறிந்தும் - சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப!
அறிமடமும் சான்றோர்க்கு அணி.

பொருள்:

பாரியும் பேகனும், முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும் அளித்தனர் என்று புலவர்கள் போற்றுவர். அவை கொடுத்தற்கு உரியன அன்றென அறிந்தும் அறியாதார் போல அவர்கள் கொடுத்ததால் அவர்கள் சிறப்படைந்தனர்.சான்றோர் பெருமை இதனால் கூறப்பட்டது. அறிமடமும் சான்றோர்க்கு அணி என்பது பழமொழி. அறிந்தே செய்யும் மடமைச் செயலும் சான்றோர்க்குச் சிறப்பே தருவதும் சொல்லப் பெற்றது.


நன்றி